ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2514 - 2026 නොවැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2026.11.06

2514 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
கேள்விப்பத்திர அறிவித்தல்கள்	-	உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்	3282
கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்	-	அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்	-
பொருட்கள் விற்பனவும் பிறவும்	3274	ஏல விற்பனைகள்	3282
ஆய விற்பனையும் குத்தகையும்	-	நானாவித அறிவித்தல்கள்	-

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026,நவெம்பர் மாதம் 27ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பிரசன்ன ஜயரத்ன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3273 - B 82845- (2026/11)

கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசனம் வளங்கள் அமைச்சு
இலங்கை நில அளவைத் திணைக்களம்

விலைமனுக்கோரல்

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கான கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் - 2026

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் விலை மனுக்கோரல்கள் 2026.11.20ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி.ப.2.05 மணிக்கு திறக்கப்படும்.

மாகாணம்	*மாவட்டம்*	*பிரதேச நில அளவை அலுவலகம்*	*கேள்விமனு ஒப்படைத்தல்*	*அருகில் உள்ள நகரம்*	*தேவைப்படும் திகதி*
சப்பிரகமுவ மாகாணம்	கேகாலை	ருவன்வெல்லை	மாகாண நில அளவையாளர் நாயகம்(சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகத்தின் பொது அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி.	ருவன்வெல்லை	2027.01.01
வட மாகாணம்	முல்லைத்தீவு	முல்லைத்தீவு	மாகாண நில அளவையாளர் நாயகம்(வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம், வவுனியா.	முல்லைத்தீவு	2027.01.01

பூரணப்படுத்தப்படவேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்:

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் கழிவுகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வெவ்வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவிற்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்கு செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இட வசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2026.11.20ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

ஓ.டி.எம்.ஐ. திலகரத்ன,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
பெர்னாட் சொய்சா மாவத்தை,(கிருல வீதி),
கொழும்பு -05.
2026, ஒற்றோபர் 29.

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2026
விலைமனுக்கோரல் விண்ணப்பப்படிவம் - 2026

கட்டிட உரிமையாளருக்காக:

01. முழுப் பெயர்: .....
02. முகவரி: .....
03. தொலைபேசி இலக்கம்: .....
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: .....

கட்டிடம் தொடர்பாக :

01. எந்தப் பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது? .....
02. மாதாந்த வாடகைத் தொகை?
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி:
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி.மீ: .....
05. இடத்தின் விஸ்தீரணம்: .....
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும்: .....
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா?: .....
08. தனியாக அவதானிக்கக் கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா?: .....
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/ கம்பி/ வேலி: .....)
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை: .....
11. கம்பி மூல தொலைபேசித் தொடர்பு உள்ளதா?: .....

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .....

11- 78

பொருட்கள் விற்பனவும் பிறவும்

மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

நீதிமன்றில் பழுதடைந்த பயன்பாட்டிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட பொருட்களுக்கான ஏல விற்பனை- 2026

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பழுதடைந்த பயன்பாட்டிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் 2026.11.23 ஆந் திகதி இந் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து காலை 9.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

01. பொதுமக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

02. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக் காதவிடத்துஅப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

03. விற்கப்பட்ட பொருட்களுக்கு பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவிலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

04.ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் தேசிய ஆளடையாள அட்டையுடன் சமுகம் தரவேண்டும்.

எம்.எஸ்.எம்.சப்ராஸ்,
பதில் மாவட்ட நீதிபதி.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

சான்றுப் பொருள் விபரம்

தொ.இல.	*இருப்புப் பொருட்களின் பெயர்கள்*	*எண்ணிக்கை*
01	வளிச்சீராக்கி	01
02	வளிச்சீராக்கி	01
03	கைகள் உள்ள பெஞ்ச்	01
04	கைகள் இல்லாத பெஞ்ச்	03
05	அறிவிப்புப் பலகை	02
06	இரும்பு அலுமாரி	01
07	சாதாரண நாற்காலி	14
08	தட்டச்சாளர் நாற்காலி	04
09	மும்முனை மின்மாற்றி	01
10	மீளப்பயன்படுத்தும் விளக்கு (Charger Light)	02
11	கணனித்திரை (Monitor)	03
12	நிழற்படப் பிரதி இயந்திரம்	01
13	அச்சுப்பொறி இயந்திரங்கள் (HP& Brother)	02
14	கணினி மேசை	02
15	மேசை	01
16	ஆங்கில தட்டச்சு இயந்திரம்	01
17	சிங்கள தட்டச்சு இயந்திரம்	02

11- 40

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

EZY டிஸ்ரிபியுசன் (பிரைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இல. PV 7277

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : EZY டிஸ்ரிபியுசன் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 17, சமகி மாவத்தை, பொருபன வீதி, இரத்மலானை
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல. : 73/ 2021/ CO (A)
கம்பனி கலைப்பாளர்கள் பெயர் : Gerard Jeevananthan David
முகவரி : C/o Deloitte Associates,No.100, Braybrooke Place, Colombo 02

நியமனத் திகதி : 2026.06.30

11- 66/1

EZY டிஸ்ரிபியுசன் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. PV 7277

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரிவு XII இன் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : EZY டிஸ்ரிபியுசன் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 17, சமகி மாவத்தை, பொருபன வீதி, இரத்மலானை
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல. : 73/ 2021/ CO (A)
நீதிமன்ற கட்டளைத் திகதி : 2026.06.30
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2021.09.16
கம்பனி கலைப்பாளர்கள் பெயர் : Gerard Jeevananthan David
முகவரி : C/o Deloitte Associates,No.100, Braybrooke Place, Colombo 02

11- 66/2

பொது அறிவித்தல்

ட்ரைப் ஐ.என்.சி (பீவீடீ) எல்டீடி (PV 00211087), டுவென்டி டுவென்டி எய்ட் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி (PV 00222039) டிரைப் கிச்சன்ஸ் (பீவீடீ) எல்டீடி (PV 00252101), ஸ்ட்ரீட் வொக் (பீவீடீ) எல்டீடி (PV 00235448) ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

ட்ரைப் ஐ.என்.சி. (பீவீடீ) எல்டீடி, டுவென்டி டுவென்டி எய்ட் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி, டிரைப் கிச்சன்ஸ் (பீவீடீ) எல்டீடி, ஸ்ட்ரீட் வொக் (பீவீடீ) எல்டீடி ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர்களின் தீர்மானத்தின் படி, 2007 ஆம்ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242(1) க்கு அமைவாக ட்ரைப் ஐ.என்.சி. (பீவீடீ) எல்டீடி டுவென்டி டுவென்டி எய்ட் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி, டிரைப் கிச்சன்ஸ் (பீவீடீ) எல்டீடி, ஸ்ட்ரீட் வொக் (பீவீடீ) எல்டீடி ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தனி ஒரு நிறுவனமாக அதாவது ட்ரைப் ஐ.என்.சி. (பீவீடீ) எல்டீடி என்கின்ற பெயரில் தொடர்ந்தும் செயற்படும்.

மேற்படி ஒன்றிணைப்பானது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்படும் குறிக்கப்பட்ட திகதி ஒன்றிலிருந்து அமுலுக்கு வரவுள்ளது.

பணிப்பாளர்கள்,

ட்ரைப் ஐ.என்.சி (பீவீடீ) எல்டீடி (PV 00211087), டுவென்டி டுவென்டி எய்ட் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி (PV 00222039) டிரைப் கிச்சன்ஸ் (பீவீடீ) எல்டீடி (PV 00252101), ஸ்ட்ரீட் வொக் (பீவீடீ) எல்டீடி (PV 00235448).

11- 63

பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம்இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

த நிவாசா செரிட்டி (THE NIVASA CHARITY)

2007 ஆம்ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 34 ஆம் பிரிவின் கீழ் "THE NIVASA CHARITY" என்ற பெயரில், அதன் பெயருடைய "Limited" என்ற சொல்லைச் சேர்க்காமல், உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக ஒரு சங்கத்தைப் பதிவு செய்வதற்கான உரிமத்தைப் பெறுவதற்கு கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கின்றோம்.

முன்மொழியப்பட்ட இவ்வமைப்பு இலாப நோக்கமற்ற அமைப்பாகும். அதன் நோக்கங்கள் பின்வருமாறு:

1. குறிப்பாக வறிய, பாதிப்புக்குள்ளாகக்கூடிய சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய அநாதையான அல்லது வேறு வகையில் உதவி பெறத் தகுதியுடைய சிறுவர்களின் கல்வியையும் வாய்ப்புகளையும் மேம்படுத்துதல்,

2. சிறுவர்களின் கல்வி மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான இலவசக் கல்வி உதவிகள், புலமைப்பரிசில்கள், நிதி உதவிகள், மேலதிகக் கற்பித்தல் , வழிகாட்டுதல், ஆலோசனை, கல்விப் பொருட்கள், புத்தகங்கள், சீருடைகள், உபகரணங்கள், கணினிகள், தொழில்நுட்ப வளங்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்,

3. கல்வியை மேம்படுத்துவதற்காக கல்வி நிலையங்கள், நூலகங்கள், கற்றல் வசதிகள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், சமூகக் கற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களை நிறுவுதல் , பராமரித்தல், நிர்வகித்தல் மற்றும் நடாத்துதல்,

4. சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கல்வி கலாசார, பொழுதுபோக்கு, தொழிற்பயிற்சி, வாழ்க்கைத்திறன்கள், மொழி, எழுத்தறிவு, தலைமைத்துவம் மற்றும் தனிப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் நடாத்துதல்,

5. அமைப்பின் நோக்கங்களை மேம்படுத்துவதற்காக தனிநபர்கள், அமைப்புகள், நிறுவனங்கள் , அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளிடமிருந்து மானியங்கள், நன்கொடைகள், அனுசரணைகள், அன்பளிப்புகள், அறக்கட்டளை நிதிகள் மற்றும் ஏனைய பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்ளுதல்,

6. அமைப்பின் நோக்கங்களை முன்னெடுப்பதற்காக அரச அதிகாரிகள், கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சமூகக் குழுக்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினருடன் ஒத்துழைத்துச் செயற்படுதல்,

7. மேற்கூறிய எதனையும் பொருட்படுத்தாமல், இவ்வமைப்பு எந்தவொரு ஆரம்பப்பாடசாலையையோ, இடைநிலைப் படாசாலையையோ அல்லது முறையான ஆரம்ப அல்லது இடைநிலைக் கல்வியை வழங்கும் எந்தவொரு நிறுவனத்தையோ நிறுவவோ , நடத்தவோ, நிர்வகிக்கவோ அல்லது செயற்படுத்தவோ கூடாது.

முன்மொழியப்பட்ட அமைப்பின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 79C, மாத்தறை வீதி, அஹங்கம, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவதாவது, இந்த விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் எந்தவொரு தனிநபரும் , கம்பனியும் அல்லது கூட்டுத்தாபனமும், இவ்விளம்பரம் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வாரங்களுக்குள் கம்பனிகள் பதிவாளர் நாயகம் , சமாகம் மெதுர, இலக்கம் 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10, இலங்கை என்ற முகவரிக்கு கடிதம் மூலம் தமது ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கலாம்.

மொஹமட் ஜனாஸ் நிலாம்,
கம்பனிச் செயலாளர்.

11- 59

ஏல விற்பனைகள்

சம்பத் வங்கி பீஎல்சீ
(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டீ என் வீரதுங்க மற்றும் எச் ஏ ரீ ஜயகாந்தி
கணக்கு இல. 0021 5000 2381

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2026.04.29ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2026.05.22ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2026.05.15ஆந் திகதியதிவயின (Divaina) , ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் இரண்டு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து பதின் எட்டாயிரத்து ஐந்நூற்று எண்பத்து இரண்டு ரூபா எழுபத்து இரண்டு சதம் (ரூபா 23,218,582.72) 2026, மாச்சு 03 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இலங்கையில் சட்டபூர்வமாகசெல்லுபடியாகும் ரூபாவில் எழுபத்து நான்கு இலட்சம் ரூபா (ரூபா 7,400,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து தசம் ஐந்து சைபர் வீதம் (15.50%) மேலும் ஒருகோடியே பதினேழு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம் ரூபா (ரூபா 11,772,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைத்து தசம் ஐந்து சைபர் வீதம் (15.50%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 73, 69, 245, 886, 1217 மற்றும் 2098 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு மெசஸ் ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் இன் உத்தரவுபெற்ற ஏலதாரர்களான திரு. எம்.எச்.ரீ கருணாரத்ன என்பவர்கள் மூலமாக 2026.12.21ஆந் திகதி மு.ப.11.00மணி முதல், அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவின் (மத்திய) அநுராதபுரம் மா நகர சபை கெந்த கோரளே எல்லைகளுக்குள் சாலிய மாவத்தை - இல. 318 கிராம அலுவலர் பிரிவின் வோட் 03 நுவரவெவ (மீஹீன்தலே வீதி) "நுவரவெவகெலே" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. டீ. கலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, ஒற்றோபர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 3111 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அவ்வாறே இல. 3120 எனும் வரைப்படத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 02 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: ஓடை; கிழக்கு: இல. 2412 எனும் வரைபடத்தின் லொட் 02; தெற்கு: இல. 2412 எனும் வரைபடத்தின் லொட் 04 (வீதி) மற்றும் மேற்கு: லொட் 01, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் எட்டு தசம் எட்டு சைபர் பேர்ச் (00ஏ. 01றூ. 8.80பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3120 எனும் வரைப்படத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 02 கீழே விபரிக்கப்பட்ட காணியின் உப பிரிவும் மீள் அளவீடுமாகும்:

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவின் (மத்திய) அநுராதபுரம் மா நகர சபை கெந்த கோரளே எல்லைகளுக்குள் சாலிய மாவத்தை - இல. 318 கிராம அலுவலர் பிரிவின் வோட் 03 நுவரவெவ (மீஹீன்தலே வீதி) "நுவரவெவகெலே"

என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. வீ. சம்பத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2023, ஏப்பிறல் 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 4032 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: ஓடை; கிழக்கு: இல. 2412 எனும் வரைபடத்தின் லொட் 02; தெற்கு: இல. 2412 எனும் வரைபடத்தின் லொட் 04 (வீதி) மற்றும் மேற்கு: ஓடை, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் பதின் நான்கு தசம் ஐந்து சைபர் பேர்ச் (00ஏ. 02றூ. 14.50பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன்கூறப்பட்டஇல.4032எனும்வரைபடத்திற்கு அமைவாக அநுராதபுரம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் F 38/18 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மார்க்க பிரவேசம்.- அநுராதபுரம் புராதன நகரத்திலிருந்து நிவத்தகச்சேரிய வீதியுனூடாக 1.5 கி.மீற்றர்கள் வரை முன்நோக்கிச் சென்று புத்தளம்- திருகோணமலை வீதி (மாத்தளை வீதி பிரசித்தி பெற்ற) ஐ சந்தித்து வீதிக்கு வலதுபக்கமாகத் திரும்பி மேலும் 200 மீற்றர்கள் வரை மஹிந்த வித்தியாலயம் வரை முன்னோக்கி செல்லவும். மஹிந்த வித்தியாலத்தை கடந்து சரளைக்கற் பாதைக்கு (ஹெபி லியோனி ஹொட்டேல் என பெயர் பதாகையையுடைய) இடது பக்கமாக உட்புறமாக சென்று 500 மீற்றர்கள் வரை இதன் வழியாகச் சென்று குறித்த சொத்தை அடையுங்கள். குறித்த சொத்து இவ் வீதியின் இடதுகை பக்கமாக அமைந்துள்ளது.

கட்டணங்கள் செலுத்தும் முறை: ஏல விற்பனை நிறைவடைந்தவுடன் வெற்றி பெற்ற கொள்வனவாளர் கீழே குறிப்பிடப்பட்ட தொகைளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்முதல் விலையின் நூற்றுக்கு பத்து (10%) வீதம்;
2. சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி வரி நூற்றுக்கு ஒரு (1%) வீதம்;
3. ஏலதாரரின் கொடுப்பனவாக நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து (2.5%) வீதம்;
4. தேவையாயின் VAT கட்டணம்;
5. ஏனைய சம்பந்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் செலவுகள்;
6. இலங்கை அரசு அல்லது வேறு தேசிய அமைப்புகளினால் விதிக்கப்பட்ட சட்டபூர்வமான வரிகள், தீர்வைகள் மற்றும் ஏனைய கட்டணங்களுடன் கொள்முதல் விலையின் எஞ்சிய நூற்றுக்கு தொண்ணூறு 90%) வீதம் விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் எஞ்சிய பணத்தை செலுத்தத் தவறினால் 10% முற்பணத்தை இலக்க நேரிடும். அத்துடன் எவ்வித முன் அறிவித்தலுமின்றி சொத்தை மீள் ஏல விற்பனை செய்வதற்கான உரிமை வங்கிக்கு உண்டு.

தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.- தயவு செய்து மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும், கடன் மீட்புப் பிரிவு, சம்பத் வங்கி பீஎல்சீ, இல. 110, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 02.

தொலைபேசி இல.: 011 4416237.

எதுவித முன்னறிவித்தலுமின்றி ஏல விற்பனையை தற்காலிகமாக நிறுத்துவது, பிற்போடுவது அல்லது இரத்துச் செய்வது வங்கிக்கான உரிமையாகும்.

திரு. எம்.எச். ரீ. கருணாரத்ன,
மெசஸ் ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் இன்
உரிமம் பெற்ற ஏலதாரர்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11- 94

சம்பத் வங்கி பீஎல்சீ
(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ரீ எஸ் பெரேரா
கணக்கு இல.1051 8100 1532

2025.10.21 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2025.10.21ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2026.07.24ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2026.08.03 ஆந் திகதிய திவயின (Divaina) , ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து ஐம்பதினாயிரத்து இருநூற்று ஐம்பத்தி ஏழு ரூபா நாற்பத்தி எட்டு சதம் (ரூபா 15,050,257/48) 2025, செத்தெம்பர் 29ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு கோடியே பதின் எட்டு இலட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரத்து முந்நூற்றி எழுபத்தி நான்கு ரூபா நாற்பத்தி ஆறு சதம் (ரூபா 11,895,374/46) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு தசம் சைபர் வீதம் (14.0%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 4107 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான என் யூ ஜயசூரிய என்பவர்கள் மூலமாக

2026.12.18ஆந் திகதி மு.ப.9.30மணி முதல், அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் கண்டி மா நகர சபை எல்லைகளுக்குள் கெட்டம்பெ 259 கிராம அலுவலர் பிரிவின் பிரைம்ரோஸ் கார்டனில் அமைந்த "பிரைம்ரோஸ்ஹில் எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் AMD அதப்பத்து என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, ஓகத்து 05ஆந் திகதியிடப்பட்ட இல.1034 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 02 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வட கிழக்கிற்கு இதே வரைபடத்தின் லொட் 1, தென் கிழக்கிற்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் AMD அதப்பத்து என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 913 எனும் வரைபடத்தின் லொட் 3, தென் மேற்கிற்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் A M D அதப்பத்து என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 913 எனும் வரைபடத்தின் லொட் 2 மற்றும் இதே வரைபடத்தின் லொட் 1 மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் AMD அதப்பத்து என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 913 எனும் வரைபடத்தின் லொட் 3 மற்றும் வட மேற்கிற்கு இதே காணியின் லொட் 3 என குறிப்பிடப்பட்ட 10 அடி அகல அணுகல், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒன்பது தசம் ஐந்து பேர்ச்(AO-RO-P9.5) அல்லது 0.02403 Hectares விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1034 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 637/150 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் A. M. D. அதப்பத்து என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, ஓகத்து 05ஆந் திகதியிடப்பட்ட இல. 1034 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 03 (அணுகல் வழி) ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது கூறப்பட்ட வரைபடத்திற்கு அமைவாக ஒன்று தசம் ஏழு பேர்ச் (00ஏ. 00றூ. 1.7பே) அல்லது 0.00431 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக்கொண்டது.

கூறப்பட்ட காணி மற்றும் வளவுகள் கீழே காட்டப்பட்ட காணியின் பிரிக்கப்பட்ட பகுதியாகும்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் கண்டி மா நகர சபை எல்லைகளுக்குள் கெட்டம்பெ 259 கிராம அலுவலர் பிரிவின் பிரைம்ரோஸ் கார்டனில் அமைந்து "பிரைம்ரோஸ்ஹில் எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் A M D அதப்பத்து என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017 செத்தெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 913 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வட கிழக்கிற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் A B கிரிதென என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 436 எனும் வரைப்படத்தின் லொட் 47; தென் கிழக்கிற்கு: கூறப்பட்ட இல. 913 எனும் வரைபடத்தின் லொட் 3 என குறிப்பிடப்பட்ட (1 அடி அகல) வடிகால்; தென் மேற்கிற்கு: கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 2; மேற்கிற்கு: அரலியமாவத்தை; வட மேற்கிற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் A B கிரிதென என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 436 எனும் வரைபடத்தின் லொட் 49, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் ஏழு பேர்ச் (00ஏ. 00றூ. 20.7பே) அல்லது 0.05237 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 637/07 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11- 92

சம்பத் வங்கி பீஎல்சீ
(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

மொண்ட்டி ஹொட்டேல்
கணக்கு இல.0062 1000 0753

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2025.06.25ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2026.01.16ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2026.01.16ஆந் திகதிய திவயின (Divaina) , 2026.01.13 ஆந் திகதிய ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஒரு பில்லியன் முப்பத்து எட்டு கோடியே நான்கு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபா ஐம்பது சதம் (ரூபா 1,380,471,650.50) 2025, ஏப்பிறல் 07 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு பில்லியன் இருபது கோடியே அறுபத்து ஒரு இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து முந்நூற்று பன்னிரெண்டு ரூபா எழுபத்து நான்கு சதம் (ரூபா 1,206,163,312.74) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து தசம் ஐந்து சைபர் வீதி (15.50%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 804, 1266, 1556, 1787, 1905, 4893, 3684, 3961, 4397, 5889

மற்றும் 4082 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான என். யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2026.12.29ஆந் திகதி மு.ப.10.00 மணி முதல், அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடகம்பாஹா கோரலே பாத்த தும்பர குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவு குண்டசாலை நட்டாரம்பொத்த கிராம அலுவலர் பிரிவின் நட்டாரம்பொத்த இல் அமைந்த "கம்மடுவ குரூப் இன் ஒரு பகுதியான தல்வத்த எஸ்ட்டேட் தற்போது கசுசித்ரோ என அறியப்படும் அழைக்கப்படும்" காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. டீ. தயாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, யூன் 17 மற்றும் 2007, ஒகத்து 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 1568A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: வீதி (இல. 1475 எனும் வரைபடத்தின் லொட் 1) மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தின் லொட் 2 இன் ஒரு பகுதி; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல.7501 எனும் வரைபடத்தின் லொட் 3 இன் ஒரு பகுதி மற்றும் PP MAHA வரைபட இல. 2206 இன் லொட் இலக்கங்கள் 306 மற்றும் 296 (விக்டோரியா தேக்கம்) தெற்கு: PP MAHA வரைபட இல. 2206 இன் லொட் இல. 295 (விக்டோரியா தேக்கம்) மற்றும் மேற்கு: தல்வத்த எஸ்ட்டேட் இன் ஒரு பகுதி - கல்மடுவ குரூப், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் மூன்று றூட் மற்றும் முப்பது தசம் எட்டு மூன்று ஐந்து பேர்ச் (01ஏ. 03றூ. 30.835பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1568A எனும் வரைபடத்திற்கு அமைவாக குண்டசாலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D345/71 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற் கூறப்பட்ட லொட் 1, இல. 1475 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் இலக்கங்கள் 2 மற்றும் 3 மற்றும் இல. 1568 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 எனும் அருகருகே அமைந்த காணிகள் ஒன்றிணைக்கப்பட்டு மீள் அளவீடு செய்யப்பட்டு கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது.

a. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடகம்பாஹா கோரலே பாத்ததும்பர பிரதேசசெயலாளர் பிரிவு குண்டசாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் நட்டாரம்பொத்த கிராம அலுவலர் பிரிவின் நட்டாரம்பொத்த இல் அமைந்த " கம்மடுவ குரூப் இன் ஒரு பகுதியான தல்வத்த எஸ்ட்டேட் தற்போது காசுசித்ரோ என அறியப்படும் அழைக்கப்படும்" காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எம். ஏ. பீ. விக்ரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.04.21 ஆந் திகதியிடப்பட்டஇல.1475எனும்வரைபடத்தில்காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல.7501 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 3 மற்றும் 2 இன் மீதமுள்ள பிரதேசம் மற்றும் இவ் வரைப்படத்தின் லொட் இலக்கங்கள் 1 மற்றும் 2; கிழக்கு: இவ் வரைபடத்தின் லொட் 2 உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக் கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தின் லொட் 3 இன் மீதமுள்ள பிரதேசம் மற்றும் விக்டோரியா தேக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்ட இதே காணியின் ஒரு பங்கு; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 6406 எனும் வரைபடத்தில் லொட் 6 என குறிப்பிடப்பட்ட டீ. எப். அபேசெக்கர உரிமம் கோரும் இதே காணியின் ஒரு பகுதி மற்றும் விக்டோரியா தேக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்ட இதே காணியின் ஒரு பங்கு மற்றும் மேற்கு: திருமதி டீ. எம். ஈ. எச். அமரசெக்கர உரிமம் கோரும் கல்மடுவ குரூப் இன் தல்வத்த எஸ்ட்டேட் இன் ஒரு பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் இரண்டு றூட் மற்றும் இருபத்து மூன்று தசம் சைபர் நான்கு பேர்ச் (01ஏ. 02றூ. 23.04பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் குண்டசாலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 527/253 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

b. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், உடகம்பாஹா கோரலே பாத்த தும்பர பிரதேச செயலாளர் பிரிவு குண்டசாலை நட்டாரம்பொத்த கிராம அலுவலர் பிரிவின் நட்டாரம்பொத்த இல் அமைந்த "கம்மதுடுவ குரூப் இன் ஒரு பகுதியான தல்வத்த எஸ்ட்டேட் தற்போது காசுசித்ரோ என அறியப்படும் அழைக்கப்படும்" காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எம். ஏ. பீ. விக்ரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.04.21 ஆந் திகதியிடப்பட்ட இல. 1475 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: இவ் வரைபடத்தின் லொட் 1 மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 1 மற்றும் 3; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தின் லொட் 3 இன் மீதமுள்ள பிரதேசம்; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தின் லொட் 3 இன் மீதமுள்ள பிரதேசம் மற்றும் இவ் வரைபடத்தின் லொட் 3 மற்றும் மேற்கு: இவ் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 1 மற்றும் 3, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு தசம் நான்கு ஒன்பது பேர்ச் (00ஏ. 00றூ. 7.49பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் குண்டசாலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 527/254 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

c. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடகம்பாஹா கோரலே பாத்த தும்பர பிரதேச செயலாளர் பிரிவு குண்டசாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் குண்டசாலை நட்டாரம்பொத்த கிராம அலுவலர் பிரிவின் நட்டாரம்பொத்த இல் அமைந்த "கம்மடுவ குரூப் இன் ஒரு பகுதியான தல்வத்த எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. டீ. தயாரத்ன என்பவரால்

தயாரிக்கப்பட்ட 2007.08.10 ஆந் திகதியிடப்பட்ட இல. 1568 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தின் லொட் 2; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எம். ஏ. பீ. விக்ரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993. ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 1475 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 2 மற்றும் 3 தற்போது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டீ. தயாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, யூன் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 1128 எனும் வரைபடத்தின் லொட்; தெற்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எம். ஏ. பீ. விக்ரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 1475 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 2 மற்றும் 3 தற்போது உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. டீ. தயாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, யூன் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 1128 எனும் வரைபடத்தின் லொட் 1 மற்றும் மேற்கு: தல்வத்த எஸ்ட்டேட் - கல்மடுவ குரூப் இன் ஒரு பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரூ றூட் மற்றும் மூன்று தசம் ஏழு மூன்று இரண்டு பேர்ச் (00ஏ. 01றூ. 3.732பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் குண்டசாலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 830/40 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடகம்பாஹா கோரலே பாத்த தும்பர பிரதேச செயலாளர் பிரிவு குண்டசாலை நட்டாரம்பொத்த கிராம அலுவலர் பிரிவின் நட்டாரம்பொத்த இல் அமைந்த "கம்மடுவ குரூப் இன் ஒரு பகுதியான தல்வத்த எஸ்ட்டேட் தற்போது காசுசித்ரோ என அறியப்படும் அழைக்கப்படும்" காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எம். ஏ. பீ. விக்ரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.04.21 ஆந் திகதியிடப்பட்ட இல. 1475 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: டீ. எம். ஈ. எம். அமரசேக்கர மற்றும் Dr. ஜயகொடி என்பவர்களால் உரிமம் கோரும் தல்வத்த எஸ்ட்டேட் கல்மடுவ குரூப் இன் ஒரு பகுதி மற்றும் பொது வீதி மற்றும் Dr. ஜயகொடி என்பவர்களால் உரிமம் கோரும் தல்வத்த எஸ்ட்டேட் கல்மடுவ குரூப் இன் ஒரு பகுதி; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தின் லொட் 1 இன் மீதமுள்ள பிரதேசம்; தெற்கு:உத்தரவுபெற்ற நில அளவையாளர் L A de C விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தில் லொட் 3 இன் மீதமுள்ள பிரதேசம் மற்றும் இவ் இதே வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 2 மற்றும் 3 மற்றும் மேற்கு: எல். ஏ. டீ. சீ. விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 7501 எனும் வரைபடத்தின் லொட் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்து ஒன்பது தசம் ஒன்று ஏழு பேர்ச் (00ஏ.00றூ.29.17பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அதன்கண் அமைந்த அனைத்துமுடன் குண்டசாலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D 345/72 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈட்டு முறி இலக்கங்கள் 804, 1266, 1556, 1787, 1905, 4893, 3684, 4397, 5889 மற்றும் 4082 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

2. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், யட்டிகிந்த பிரிவு பாத்த தும்பர உடகம்பாஹா கோரலே குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவு மெனிக்ஹின்ன பிரதேச சபை எல்லைகளுக்குள் நட்டாரம்பொத்த 684 கிராம அலுவலர் பிரிவின் நட்டாரம் பொத்த இல் அமைந்த "தல்வத்த எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஜீ. எஸ். கே. ஜயரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, திசெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 559/A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: இல. 559/A எனும் வரைபடத்தின் லொட் 3 (வீதி); வடகிழக்கு: பிரதான வீதியிலிருந்து வீடுகளுக்கான தெரு; கிழக்கு மற்றும் தெற்கு: ஈ. பாலித உரிமம் கோரும் தல்வத்த எஸ்ட்டேட் இன் ஒரு பகுதியை பிரிக்கும் வயர் வேலி மற்றும் மேற்கு: லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினைந்து பேர்ச் (00ஏ. 00றூ. 15பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 559/A எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D 203/141 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் காணித்துண்டுகளின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிகிந்த பிரிவு பாத்த தும்பர உடகம்பாஹா கோரலே குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவு மெனிக்ஹின்ன பிரதேச சபை எல்லைகளுக்குள் நட்டாரம்பொத்த 684 கிராம அலுவலர் பிரிவின் நட்டாரம்பொத்த இல் அமைந்த "தல்வத்த எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஜீ. எஸ். கே. ஜயரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, திசெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 559/A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: இல. 558 எனும் வரைபடத்தின் லொட் 1 மற்றும் இல. 557 எனும் வரைபடத்தின் லொட் 1; கிழக்கு: பிரதான வீதியிலிருந்து வீடுகளுக்கான தெரு; தெற்கு: லொட் 2 மற்றும் மேற்கு: இவ் வரைபடத்தின் லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று பேர்ச் (00ஏ. 00றூ. 03பே) (3.85 மீற்றர்கள் அகல வீதி) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 559/A எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D 209/134 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3961 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

11- 90

இலங்கை வங்கி
ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின்
(397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ்
வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

நிரந்தர மேலதிகப் பற்று இல. - 86957730

இல.265/B/ 3, லியன காடன், பட்டுவத்த, ராகம எனும் முகவரியில் வசிக்கும் இலக்கம் 15/5, அத்துல பிரதேசம், கிருலபனை வீதி, கொழும்பு 05 எனும் முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட Kudakon Design & Construction தனியார் நிறுவனத்தின் பணிப்பாளரான திருமதி சந்ராவதி சித்ரா மானல் காந்தி என்பவரின் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.07.24 ஆந் திகதியிட்ட 2499 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2026.10.07ஆந் திகதிய தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும், நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H நிறுவனத்தின் ஏலதாரர் திரு.M.H.T. கருணாரத்ன அவர்கள் 2026.12.11ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

தெல்கஹவத்த" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.பி. ஜயசேகர தயாரித்த 2013.08.23ஆந் திகதியிட்ட 19430ஆம் இலக்கவரைபடத்தில்விபரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு B3 அக்காணித்துண்டிலுள்ள மண், கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளையின் ராகம் பத்துவில், ஜாஎல பிரதேச சபை (பட்டுவத்தை துணை அலுவலகம்) மற்றும் ஜாஎல பிரதேச செயலக எல்லைகளுள், இல.213, பட்டுவத்த மேற்கு கிராம அலுவலர் பிரிவில், 42/13 எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தில் பட்டுவத்தை எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு வடக்கில் காணித்துண்டு B4 இனையும், கிழக்கில் காணித்துண்டு R1 இனையும், தெற்கில் காணித்துண்டு B2 இனையும் மேற்கில் பீ.ஏ.டி.டீ. குசுமலத்தா மற்றும் பீ. ஏ. டி. கே. நெவில் ஆகியோரின் காணிகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 19430 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு (00ஏ. 00றூ. 10பே) பத்து பேர்ச் பரப்பளவுடன், J209/11 எனும் இலக்கத்தின் கீழ் கம்பஹா காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

19430 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டுகள் R1 மற்றும் R2 (பாதைகளுக்கான ஒதுக்கம்) மீதான வழியுரிமையும் உள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்:

1. கொள்வனவு விலையில் 10% (பத்து வீதம்) ;
2. வட் (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5 % (இரண்டு தசம் ஐந்து வீதம்) ;
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும் .மேலும் விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வானவாளர் செலுத்த வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காத விடத்து, விற்பனை தொடர்பில் அவரால் செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

ஆதனத்துக்கு சென்றடையும் வழி: ராகம கனேமுல்ல வீதியில் பயணித்து , பட்டுவத்த ரயில் நிலையத்தை அடைந்ததும், இடது புறமாக கந்தானை வீதிக்குத் திரும்பி சுமார் 600 மீற்றர் செல்லவும். அதன் பிறகு வலதுபுறமாக ஆத்தர் பெரேரா மாவத்தையில் திரும்பி சுமார் 400 மீற்றர் பயணிக்கவும். இறுதியாக வலதுபுறமாக உள்ள தார் வீதியில் திரும்பி சுமார் 200 மீற்றர் சென்றால் இரண்டாவது சுற்று வட்டத்தின் வலதுபுறத்தில் குறித்த ஆதனம் அமைந்துள்ளது.

"ஏல விலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட

ஆவணங்களையும் பட்டுவத்த கிளையின் முகாமையாளரைத் தொடர்பு கொள்வதன் மூலம் பார்வையிட முடியும்.
தொலைபேசி இலக்கம் - 011- 2960892".

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திருமதி. கே.கே.எஸ். பிரேமசிறி,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பட்டுவத்த கிளை.

11- 83

இலங்கை வங்கி
ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின்
(397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ்
வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் வசதி தொடர்பு இல. -87907539 மற்றும் 87907618.

இல. 164/B/ 4, துரியங்கஸ் சந்தி, கட்டான கிழக்கு, கட்டான எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி ஜயசிங்க ஆரச்சிகே மதுஷ்கா மஹேஷி ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.10.23 ஆந் திகதியிட்ட 2512 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2026.10.16ஆந் திகதி வெள்ளிக்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும், நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்ன அவர்கள் 2026.11.20ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட ஈட்டு முறிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை

காணியின் விபரங்கள்;

(a). மாவட்டம் : கம்பஹா
(b). பிரதேச செயலாளர் பிரிவு : கட்டான
(c). கிராம அலுவலர் பிரிவு : கட்டான கிழக்கு
(d). கிராமம் அல்லது நகரம் : கட்டான கிழக்கு
(e). வீதி : -
(f). வரிமதிப்பீட்டு இலக்கம் : -
(g). நில அளவை வரைபட இலக்கம் : 511206
(h). தொகுதி இலக்கம் : 03
(i). காணித் துண்டு இலக்கம் : 0072
(j). பரப்பளவு : 0.0455 ஹெக்டயார்
(k). கூட்டாண்மைக் குடியிருப்பு ஆதனமாயின் அலகின் இலக்கம் :-

முந்தைய பதிவு விபரம்;

(a). பதிவு செய்யப்பட்ட இடம் : நீர்கொழும்பு
(b). பிரிவு : -
(c). தொகுதி இலக்கம் : -
(d). பக்க இலக்கம் : -
(e). உரித்துச் சான்றிதழ் இலக்கம் : 00052545052
(f). உரித்தின் வகை : முதலாம் தரம்

"ஏல விலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதிகளையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் வைக்கால் கிளையின் முகாமையாளரைத் தொடர்பு கொள்வதன் மூலம் பார்வையிட முடியும்."

தொலைபேசி இலக்கம் - 031- 2277280."

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்:

1. கொள்வனவு விலையில் 10% (பத்து வீதம்) ;
2. வட் (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5 % (இரண்டு தசம் ஐந்து வீதம்) ;
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும் .மேலும் விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வானவாளர் செலுத்த வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காத விடத்து, ஏல ஏல விற்பனை தொடர்பில் அவரால்

செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் கையகப்படுத்தும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திருமதி H.D.K.J. விமலரத்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வைக்கால் கிளை.

11 - 84

இலங்கை வங்கி
ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின்
(397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ்
வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல. -92172088

M/S ஜயவீர என்ரபிறைசஸ் (தனியார்) நிறுவனத்தாரின் (இல.155, மொரக்கெட்டிய, எம்பிலிப்பிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. விக்கிரமசிங்க சுனில் ஜயவீர இதன் பணிப்பாளராவார்) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.09.18ஆந் திகதியிட்ட 2507 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2026.09.25ஆந் திகதி வெள்ளிக்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும், நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்ன அவர்கள் 2026.12.29ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

1. 'பலுகஹவத்த' எனப்படும் பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மகம் பற்றில் திஸ்ஸமஹராம பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 11, மகாசேன்புர கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அக்குரகொட என்ற இடத்தில் அமைந்துள்ளது. குறித்த காணித்துண்டு 1 ஆனது வடக்கில் பாதையையும் கிழக்கில் "PP 4561ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 12575ஆம் இலக்கக் காணித்துண்டையும் தெற்கில் 4561ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 12575, 12597ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் மேற்கில் அரச காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இரண்டு றூட்கள் (A0.R2.P0) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அம்பாந்தோட்டை மாவட்டக் காணிப்பதிவகத்தில் பக்கம் K 55/112இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர்.ஏ. சோமதாச அண்மையில் தயாரித்த 2011.06.19. ஆந் திகதிய 2011/105ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

